முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 556**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**07.04.2021**, புதன்கிழமை

1. அறமெனும் சக்தியே அரங்கா
அருளாக வருகின்ற தேசிகா
திறம்பட உலகமக்கள் உன்வழி
தெய்வநெறி காண குருவாய் அருளும் குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
வரம்பெற்று என்பால் உயர்சித்தியாக
வள்ளலாக வருகின்ற மாதவசியே
3. தவசியே உந்தன் தர்மம் உலகை வெல்லும்
தவசியே உந்தன் கொள்கை இந்த உலகை ஆளும்
அவனியில் என் அவதாரமாக வந்த அரங்கனே
அகிலத்தில் உன் சக்தி பெற்ற மக்களெல்லாம்
4. மக்களெல்லாம் ஞானிகளாகி இந்த மண்ணுலகில்
மரணத்தை வெல்லும் மகா சக்தி பெற்று
பெற்றுமே கலியுகத்தின் ஞானியாக
பிரபஞ்ச மாற்றம் செய்யவல்ல சக்தியாக
5. சக்தியாக கலியில் உருவெடுத்து
சக்திமிகு ஞான யுகம்படைப்பர்
பக்திபட உன் அருளுக்கு இறங்கி கலியுக மக்களுக்கு யானும்
பாவகர்மவினைகள் போக்கி அருளிவர
6. வருகின்ற அரங்கன் தொடர்பால் வையகம் மாறும்
வருகின்ற அரங்கன் தயவாலே கலியுகம் தேறும்
தேறுமே ஞானலோகமாகி
திருஅருள்பட எந்தன் அருளாலே
7. அருளால் மாறும் கலியுகம்
ஆற்றல் மிக்க ஞானயுகமாக
வகைபட தொடர்ந்து ஓங்காரக்குடில் நோக்கி
வையகத்தார் வருகவருக இந்த அற்புதம் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.